TNED140022272025

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, பவானி**
**முன்னிலை:-திரு.J.ராஜ்குமார், B.A., LL.B.,**
**நீதித்துறை நடுவர் எண்.1, பவானி**
**2026ம் வருடம் ஜூன் மாதம் 05ம் நாள் வியாழக்கிழமை**
**CMP.No.354/2025**

குமார்
த.பெ.ராமலிங்கம்
ஜி.ஜி.நகர்,
குருவரெட்டியூர் அஞ்சல்,
அந்தியூர் தாலுக்கா,
ஈரோடு மாவட்டம். ... மனுதாரர் / புகார்தாரர்

/எதிர்/

K.S.சரவணன்
த.பெ. சுப்ரமணியம்,
வடிவேலனூர்,
கொமராயனூர்,
ஈரோடு மாவட்டம். ... எதிரி

/எதிர்/

காவல் ஆய்வாளர்
அம்மாபேட்டை காவல நிலையம்,
அம்மாபேட்டை. ... எதிர்மனுதாரர்

இம்மனுவானது மனுதாரரால் பிரிவு 175(3)BNSSன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு எதிரி மீது பிரிவு சட்டப்பிரிவுகள் 126(2), 296(2), 351(3) BNSன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நடவடிக்கை எடுக்க அம்மாபேட்டை காவல் ஆய்வாளருக்கு உத்தரவிடுமாறு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்-**

1. மனுதாரர் மேற்படி முகவரியில் வசித்து வருவதாகவும், தமிழர் திருநாளை முன்னிட்டு, தங்கள் ஊரில் உள்ள சிட்டி பாய்ஸ் நண்பர்கள் சார்பாக சென்னை

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.05 18:48:24 +0530

உயர்நீதிமன்றத்தில் உரிய அனுமதி பெற்று சேவல் சண்டை திருவிழாவை நடத்த 15.01.2025 முதல் 16.01.2025 ஆகிய தேதிகளில் நடத்த சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு இருந்ததாகவும், மேற்படி உத்ரவு எண்.WP No.621/2025 என்றும், அதன் அடிப்படையில் மனுதாரர் தோட்டத்தில் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்ததாகவும், இந்நிலையில், அம்மாபேட்டை ஒன்றியத்தை சேர்ந்தத கொமராயனூரில் வசிக்கும் எதிரி சரவணன் என்பவர் கடந்த 13.01.2025 தேதியன்று இரவு சுமார் 08.00 மணியளவில் கிட்டம்பட்டி அருகில் சென்று கொண்டிருக்கும்போது, மனுதாரரை வழிமறித்து மேற்படி சேவல் சண்டை நடத்த வேண்டும் என்றால் "எனக்கு ரூ.2,00,000/– தர வேண்டும் என்றும், " இல்லை எனில் மேற்படி நிகழ்ச்சியினை நடத்த அனுமதிக்கமாட்டேன் என்றும் கூறியுள்ளார் என்றும், மனுதாரர் எதிரியிடம் உங்களுகும் எதற்கு பணம் தரவேண்டும் என்றும், சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி தான் சேவல் சண்டை நடத்துகிறேன் என்று கூறியதாகவும், ஆனால், எதிரி மனுதாரரிடம் சென்னை உயர்நீதிமன்றமானவது, மயிராவது என்று கூறியும், தனக்கு பணம் தரவில்லை என்றால், உன்னால் ஒன்றும் புடுங்க முடியாது என்று கூறினார் என்றும் மீறி ஏதேனும் எதிரியிடம் மனுதாரர் பிரச்சனை செய்தால் மனுதாரரை அங்கேயே கொன்று புதைத்து விடுவதாகவும், வழியில் மனுதாரரை பாாத்தால் காரை விட்டு ஏற்றி கொன்று விடுவதாகவும், எதிரி மனுதாரருக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

1.2 மேற்படி எதிரி சரவணன் மனுதாரருக்கு கொலை மிரட்டல் விடுத்தது தொடர்பாக மனுதாரர் அளித்த புகாரின் பேரில், அம்மாபேட்டை காவல் நிலையத்தார் மேற்படி புகார் மனுவினை ஏற்று, கடந்த 14.01.2025ம் தேதியன்று புகார் மனு இரசீது எண்.12/2025யை வழங்கினார்கள் என்றும், அதன் பின்னிட்டு தான், பலமுறை காவல்நிலைய அலுவலர்களை அணுகி, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டுமென கூறியும், இன்றுவரை மனுதாரர் அளித்த புகார் மீது முதல் தகவல அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், எதிர்மனுதாரரான காவல்துறையினர் யாதொரு நடவடிக்கையும் எடுக்கா காரணத்தினால் மனுதாரர் எதிர்மனுதாரர்களின்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.05 18:48:28 +0530

உயர் அதிகாரியான ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு கடந்த 24.03.2025ம் தேதியன்று புகார் மனுவினை அனுப்பியும், எதிர்மனுதாரரான காவல் துறையினர் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமால் இருந்து வருகிறார்கள் என்றும், எனவே, எதிரி மீது பாரதிய நியாய சங்கிதா சட்டப்பிரிவுகள் 126(2), 296(2), 351(3) ஆகிய பிரிவுகளின் அம்மாபேட்டை காவல் நிலையம், எதிரி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி இந்த தனி புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட மனுவின் மீது இந்நீதிமன்றத்தால் மேற்படி CSR Status report குறித்து கேட்ட போது இம்மனு மீது விசாரணை மேற்க்கொண்டதில் ஏற்கனவே எதிர்மனுதாரர் சரவணிடம் புகார் பெற்றதில் வழக்கு எண்.11 / 2025 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி மனுதாரர் தற்காப்புக்காக மனு கொடுத்துள்ளார். மேற்படி மனு மீது தற்காலிகமாக விசாரணை முடிக்கப்பட்டுள்ளது. இம்மனு மீது மேல்நடவடிக்கை கைவிடப்பட்டது என்பது இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது.

3. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மேற்படி புகார் மற்றும் மனுதாரரின் மனுவை பரிசினை செய்கையில், மனுதாரர் தனது புகாரை ஒத்து தனது மனுவை கொடுத்துள்ளார் என நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. அவர் அளித்துள்ள பிரமாண வாக்குமூலமும் தனது மனுவை ஒத்து உள்ளது நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. எதிர்மனுதாரர் காவல்துறையினரிடமிருந்து பெறப்பட்ட நிலை அறிக்கையையும், மனுதாரரின் மனுவில் உள்ள ஆவணங்களையும் இந்நீதிமன்றம் பரிசீலனை செய்தது. பரிசீலனையில், சம்பவம் தொடர்பாக ஏற்கனவே எதிர்மனுதாரர் சரவணன் அளித்த புகாரின் பேரில் குற்ற எண்.11/2025 என வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பது தெரியவருகிறது. ஆனால் மேற்படி குற்ற எண் எதற்காக பதிவு செய்யப்பட்டது என்கிற எந்த விளக்கமும் மனுதாரர் மனுவில் கூறவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது. மேலும் குற்ற எண் 11/2025 இந்த வழக்கின் மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது. மேலும், மனுதாரரின் தற்போதைய புகார், மேற்கண்ட வழக்கின் பின்னணியில் தற்காப்பு நோக்கில்

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.05 18:48:29 +0530

அளிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. இத்துடன், மனுதாரரின் புகார் மீது காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு, மேல்நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை என முடிவு செய்து மனுவை முடித்துவைத்திருப்பதும் பதிவுகளின் மூலம் தெரியவருகிறது. எனவே, இவ்வழக்கில் காவல்துறையினருக்கு புதியதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவோ அல்லது மேலதிக நடவடிக்கை எடுக்கவோ உத்தரவிடுவதற்கான போதிய மற்றும் நியாயமான காரணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்திற்கு புலப்படவில்லை. ஆகையால், மேற்கண்ட பரிசிலனைகளின் அடிப்படையில் இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

முடிவு :–

எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது மேற்கண்ட காரணங்களுக்காக இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தினால் உத்தரவிடப்படுகிறது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.05 18:48:33 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1**
**பவானி.**